1981 ஏப்ரல் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை யொட்டி துணைக் கேள்வி போடுங்கள்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, கேரளாவிலிருந்து 2.3 இலட்சம் யூனிட் நமக்கு கிடைப்பதாக மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள சொன்னார்கள். இந்த நிலைமை தொடர் கதையாக நீண்டுக் கொண்டு வந்திருக்கிறது. பல வருஷங்களாக நாம் தொடர்ச்சியாக, கேரளத்திலிருந்து மின்சாரம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். தன்னிறைவு எய்தக் கூடிய முறையில் அந்த தொடர்கதையாக உள்ள மின்சாரம் வாங்குவது எப்போது நிறுத்தப்படுமா? என்பதை தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே 2.3 இலட்சம் அல்ல. 23 இலட்சம் யூனிட்டுகளை நாம் நாள் ஒன்றுக்கு வாங்கிக் கொண்டிருக்கிறோம். அதாவது 2.3 மில்லியன் யூனிட்டுகள். நாமே தன்னிறைவு எய்த வேண்டும் என்கிற அடிப்படையிலே, திட்டங்களைப் போட்டிருக்கிறோம். இன்னும் மேற்கொண்டு பல திட்டங்களைப் போட்டு, மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். சுமார் 2,000 மெகா வாட் பெறுவதற்கான திட்டங்களைத் தீட்டி, மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்று ஓரளவுக்கு அது நிறைவேற்றப்படுமானால், நாம் தன்னிறைவை எய்த முடியும். அண்டை மாநிலங்களி லிருந்து மின்சாரம் வாங்குவதும், தருவதும் இயல்பு.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கேரளத்திலும் மற்ற அண்டை மாநிலங்களில் இருந்து ஆண்டுதோறும், பெறக்கூடிய மின்சாரத்திற்கு எத்தனை கோடி ரூபாய் தமிழக அரசு செலவழிக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கேரளாவில் 12.2.80 முதல் 31.12.80 வரை 845 மில்லியன் யூனிட்டுகள் வாங்கியிருக்கிறோம். அதை 28 பைசாவில் பெருக்கினால் எவ்வளவு தொகை என்பது தெரியும்.

கீழ்மேட்டூர் நீர்மின் திட்டத்தின் கீழ் இயக்கும் நீர் ஒதுக்குச் சுவர்களிற் இடிபாடுகள்

*வினா எண். 746 திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கீழ்மேட்டூர் நீர்மின் திட்டத்தின் கீழ் நடைபெறும் சிற்றணைகளில் (Barrages) 3 இடங்களில் நீர் ஒதுக்குச் சுவர்கள் (Coffer Dams) இடிந்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) ஆம். கடந்த வெள்ளத்தின்போது கீழ்மேட்டூர் நீர்மின் திட்டத்தின் கீழ்காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட மூன்று சிற்றணைகளின் தடுப்புச்சுவர்கள் சிறிது சேதமடைந்தன. சிற்றணைகள் இரண்டிலும், மூன்றிலும் சேதம் சரி செய்யப்பட்டு கட்டுமான வேலைகள் திரும்ப ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணகிரி அணையிலுள்ள பூங்காவை நவீனப்படுத்தும் திட்டம்.

*வினா எண். 747 திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிருஷ்ணகிரி அணையில் உள்ள பூங்காவை சுற்றுலா பயணிகள் கவரும் வண்ணம் நவீனப்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) கிருஷ்ணகிரி அணையில் சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு சுற்றுலாத்துறையின் மூலமாக விடுதி ஒன்று கட்டும் திட்டம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ), இல்லை (ஆ) இல்லை. ஆனால் கிருஷ்ணகிரிக்கு அருகில் போகனப்பள்ளி கிராமத்திற்கருகில் சாலையோர தங்கும் விடுதியை (Motel) அமைக்கும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9.10)

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கிருஷ்ணகிரி அணையில் உள்ள பூங்காவைச் சுற்றுலாப் பயணிகள் கவரும் வண்ணம் நவீனப்படுத்தும் திட்டம் அரசுக்கு இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே சில இலட்சணக்கான் ரூபாய் செலவில் மின்விளக்குகள் போடப்பட வேண்டுமென்று, அரசாங்கம் ஒப்புதல் அளித்து இருந்தது. ஆகவே இதனை மீண்டும் பரிசீலனை செய்து, சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் அந்தப் பூங்காவை நவீனப்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.